RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1820

OPEN ACCESS

# ஞானக்கூத்தன் கவிதைகளில் பெண்ணியக் கூறுகள்

பெ. ராஜேந்திரன் [அ, *], அ. ஹேமலதா [அ]

[அ] தமிழ்த்துறை, மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), தத்தனூர், அரியலூர்-621805, தமிழ்நாடு, இந்தியா.

# Feminist Elements in Gnanakkuthan's Poems

P. Rajendran [a, *], A. Hemalatha [a]

[a] Department of Tamil, Meenakshi Ramasamy Arts and Science College, (Affiliated to Bharathidasan University), Thathanur, Ariyalur-621805, Tamil Nadu, India

* Corresponding Author: rajlin1984@gmail.com

Received: 03-07-2022
Revised: 08-10-2022
Accepted: 20-10-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

Feminism is one of the growing concepts in today's world. Feminism is increasing in literary field. Women are expressing their needs and rights in writing and speech with a sense of liberation, with the intention of changing the social restrictions and attitudes that oppresses women. A woman is the mother of knowledge, the heart full of grace and who showers love. The woman who had all these characteristics faced many problems. Women's liberation became emotional and that everyone was touched by that feeling. Among them Bharatiyar, Bharathidasan, Kavimani Desiya Vinayagam Pillai, Periyar, Anna, Pudumaippittan and poet Gnanakoothan tended to create rising norms for women's emancipation and women's social progress. Poet Gnanakkuthan, who was a pioneer of Puthukavithai, worked to process the ideas of women's progress. He used his poetry as a weapon. In this way, his poems were in a simple manner and reached everyone. In order to sum up his positive views, this article examines the ability of Gnanakoothan to express the suppression of women in all positions of the society by highlighting feminism, grief due to female birth, women's lack of education, dowry violence, mockery, sexual violence etc. in his poems.

**Keywords:** Feminism, Women Slavery System, Gnanakkuthan, Dowry, Female Infanticide, Ridiculous Nature, Women Rights

## முன்னுரை

'பெண் சுதந்திரம்' என்ற சிந்தனையானது பெண்ணியம், பெண்ணிலைவாதம் என்ற சொல்லாடல்களாகத் தொடங்கி கருத்தியல்களாக இன்று நிலைபெற்றுள்ளன. பெண்மை என்பது அடிமையின் அடையாளம் அல்ல. பெண்கள் மதிக்கபடுதல் வேண்டும். பெண் என்பவள் மனித வாழ்விலும், சமுதாயத்திலும் ஆணின் சரிநிகர் சமமாகவும் ஒரு அங்கமாகவும் விளங்குவதால் பெண்ணியம் பற்றியும் பெண்களுக்கான பிரச்சனைகள் பற்றியும் இன்று பேசப்படுவதை அறியலாம். பெண்கள் காலங்காலமா அடிமை படுத்தப்பட்ட நிலைமாறி, இன்று சமுதாயத்தில் உரிமைப் பெற்று வருகின்றனர் என்றாலும், பெண்களுக்கான பிரச்சனைகள் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் வருகின்றது. எனவே, ஞானக்கூத்தன் தனது கவிதைகளில் பெண்ணியம் பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளமையை இக்கட்டுரைவழி அறியலாம்.

## பெண்ணியம் சொல் விளக்கம்

பெண்ணியம் என்பது அனைத்து வகைப் பெண்களுக்கும் சம உரிமை கிடைக்கப் போராடுதல் ஆகும். மேலும், பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றைக் களைய முற்படும் இயக்கமாகும். பெண்ணியமானது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும். 'Feminism' என்னும் ஆங்கிலச்சொல் 'Femina' எனும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானது. இதன் பொருள் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண்நிலை ஏற்பு, மகளிரியல், பெண்நலக் கொள்கை ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

பெண்ணியம் என்ற சொல்லுக்குப் பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது (Annithamasu, 2006). என்ற கருத்து சுட்டிக்காட்டப்படுகிறது. பெண்ணியம் என்ற சொல் 'பெமினிசம்' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் இணைச்சொல்லாக இது வழங்கப்பட்டு வருகிறது. பெமினிசம் என்பதற்கு பெண்ணியம் என்பதே பொருத்தமான கலைச்சொல்லாகும். இவ்வியக்கம் உலகளவில் அனைத்திலும் நல்ல மாற்றத்தை உருவாக்கிட முடியும்.

## பெண்ணியத்தின் முக்கியத்துவம்

20-ம் நூற்றாண்டில் பெண்ணியம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படுகின்றது. சமுதாயத்தில் பெரும்பகுதி பெண்கள்தான் என்பதால் அகவாழ்க்கையான குடும்ப வாழ்க்கை முற்றிலும் பெண்களைச் சார்ந்த ஒன்றாகவும், அவர்களைப் பொருத்ததாகவும் அமைந்துள்ளது. பெண் இல்லாத வீடும், வீடில்லாத பெண்ணும் மதிப்பில்லாதவையாகும்.

குடும்ப முன்னேற்றம் என்பது அன்று முதல் இன்று வரை பெண்களின் கையில்தான் இருந்து வருகின்றது. சங்க இலக்கியத்தில் குழந்தைகளைப் பெற்றுத் தருதல் ஒரு தாயின் கடமை என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. பெண்களின் பங்கு சமுதாயத்தில் மிகப் பெரியது என்பதனை,

"மங்கையராய்ப் பிறப்பதற்கே - நல்ல

மாதவம் செய்திட -வேண்டுமம்மா!

பங்கையைக் கைநலம் பார்த்தலவோ- இந்தப்

பாரில் அறங்கள் வளருமம்மா!

அன்பினுக் காகவே வாழ்பவர் யார்? அன்பின்

ஆவியும் போக்கத் துணிபவர் யார்?

இன்ப உரைகள் தருபவர் யார்? வீட்டை

இன்கையால் ஒளி செய்பவர் யார்?"

என்று பெண்களின் மேம்பாடுகள் குறித்து கூறியுள்ளார் (Desikavinayaga Pillai, 1961). பெண் அளப்பறிய ஆற்றல் கொண்டவள். தன்னையும் தன் கணவனையும் காக்கும் திறன் வாய்ந்தவள். விரைந்து செயல்படும் சோர்வில்லாதவள் என்ற பெண்ணின் பெருமையை,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்று வள்ளுவர் எடுத்துரைக்கின்றார் (Palanidasan, 2017). இருப்பினும், பல இடங்களில் தாக்குதலுக்கும், அடிமைப்படுத்தலுக்கும், கொடுமைகளுக்கும், உள்ளாகும் நேரத்தில் பெண்ணியம் தேவையாகின்றது.

## பெண் சிசுக்கொலை

பெண்களின் நிலையானது மனித வாழ்க்கையில் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு என்றும் மூன்று நிலைகளிலுமே அவர்களுக்கு அவலமான ஒன்றாகவே உள்ளது. இன்று வரதட்சணைக் கொடுமை தலைவிரித்து ஆடுவதால் பிறக்கின்ற பெண்குழந்தைகளைக் கொல்லும் தன்மை பரவலாகத் தமிழகத்தில் நடைபெறுகிறது. மேலும், ஆண்பிள்ளை பிறந்தால் மகிழ்ச்சியாய் இருப்பதும், பெண்பிள்ளை பிறந்தால் அழுவதும், ஏளனமாய் ஊரார் சிரிப்பதும் காணமுடிகிறது.

“குடிசைக் கதவை திறந்து மெல்ல

வெளியே வந்தவள் சொன்னால்

பொண்ணு பொண்ணு பிறந்திருக்கு

சற்று நேரத்தில் வெளியே வந்த

இன்னும் ஒருத்தி

சிரித்தாள் சிரித்தாள் அப்படிச்சிரித்தாள்"

என்ற ஞானக்கூத்தனின் வரிகளின் மூலம், பெண்குழந்தைகள் பிறந்தால் ஊரார் சிரிக்கும் கொடுமை நிலை வேதனை அளிக்கின்றது. இன்று "பெண் சென்மமே பாவசென்மம்" என சமுதாயம் கருதுகின்றது. அண்மைக்காலத்தில் பெண் சிசுக்கள் பிறந்ததும், கொலைச் செய்யப்பட்டதையும் அவற்றைக் காக்க தமிழக அரசு "தொட்டில் குழந்தை திட்டத்தை" அமுல்படுத்தியதும் மனதிற்கு சற்று ஆறுதலாகும் (Divakar Ranganathan, 2018).

## பெண் கல்வி பயிலாத நிலை

பெண்களுக்குக் கல்வியறிவு கொடுக்கப்படாமல் இருக்கும் நிலையானது மாற்றம் பெறல் வேண்டும். மக்கள் தன் குடும்பங்களிலுள்ள பெண்களைப் படிக்க வைப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். இருப்பினும், பொருளாதார இன்னல்களே அதற்குத் தடைக்கல்லாகவே இருக்கின்றது. பொருளாதாரப் பிரச்சனையின் காரணமாக அவதிப்படும் தாய், தந்தை மற்றும் பள்ளிக்கு அனுப்பப்படாத பெண்பிள்ளை ஆகியவர்களின் நிலையை ஞானக்கூத்தன்,

“வாத்தியம் ஒன்றை அவனது மனைவி

உரத்து வாசிக்கத் தொடங்கினாள்

நெடியக் கோலைக் கையில் பற்றிக்

கயிற்றின் மேலே நடந்து காட்டினான்

தரையில் சிறுமி கரணம் போட்டாள்"

என்ற கவிதையின் வழி எடுத்துரைக்கின்றார் (Divakar Ranganathan, 2018). இதில் பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதுள்ள பெண் குழந்தையை தொழிலில் ஈடுபடுத்துவதும், பொருளாதாரத் தேவை நிறைவு பெறாதபோது குடும்பத்தோடு ஒன்று சேர்ந்து உழைப்பதுமான சமூக அவலநிலையினைக் காணமுடிகின்றது. இதே போன்று,

“கல்வியில்லை, உரிமையில்லை பெண்களுக்குக்

கடைத்தேற வழியின்றி விழிக்கிறார்கள்”

என்ற கவிதையில் பாரதிதாசன் பெண்கள் கல்வியில்லாமல் உரிமையின்றி வாழ்க்கை முழுவதும் தவிக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார் (Bharathidasan, 2008).

“கல்வியில்லாத பெண்கள்

களர்நிலம், அந்நிலத்தில்

புல் விளைந்திடலாம் நல்ல

புதல்வர்கள் விளைதல் இல்லை"

என்று பாடப்பட்ட கவிதையின் மூலம் பெண் விடுதலையின் அடிமை வேர்களைக் கல்வியை மையமாகக் கொண்டே தகர்த்தெறிய முடியும் என்னும் கருத்தாக்கத்தினை இவ்வரிகள் சொல்லப்படுகிறதைக் கண்டுணரலாம் (Bharathidasan, 1991). மேலும், ஒரு பெண்ணைப் படிக்க வைப்பது ஒரு குடும்பத்தையே படிக்க வைப்பதற்கு நிகரானதாகும்.

## பெண்ணடிமை

யாருக்கும் தெரியாமல் பெண்களைக் கடத்தி வந்து அடிமைப்படுத்துதல், குடும்பத்தில் பெண்களை அடிமைப்படுத்துதல் என்று பெண்களுக்குத் தினமும் கொடுமைகள் நடக்கின்றன. பெண்களுக்கான எத்தனையோ சட்டங்கள் இருந்தும் பெண்களின் நிலை மோசமாகவே உள்ளது. அவ்வகையில் ஞானக்கூத்தன் தனது கவிதைகளில் பெண்களுக்கு நடக்கும் கொடுமைகளைப் பதிவு செய்துள்ளார்.

"பலமான கசை அடிகளுக்குப்பின்னர்

நடனமாட சம்மதித்து

சதுர்வேதி மங்கலத்துக் கோயிலின் சன்னதியில்

ஆடிய கலிங்க தேசத்து அடிமை பெண்ணின்

கண்ணீர் போன்றவை"

என்ற கவிதையில் பலமான கசை அடிகளுக்குப் பினனர் நடனமாடச் சம்மதித்த கலிங்க தேசத்துப் பெண் பற்றி கூறியுள்ளார் (Divakar Ranganathan, 2018).

"பெண்கள் என்றுமே ஆண் வர்க்கத்திற்கு அடங்கியே இருக்கவேண்டும்" என்ற நிலையும் காணப்படுகிறது. இவையெல்லாம் பெண்ணடிமைத் தனத்தை உணர்த்துகிறது. அன்றே புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பெண்ணடிமை ஒழிய வேண்டும் என்பதற்காக,"

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும்

திருநாட்டு மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே!"

என்ற கவிதையின்மூலம் பெண்களுக்குச் சமஉரிமை தந்தால் மட்டுமே பெண்ணடிமை இம்மண்ணில் அகலும் என்று சிறப்பாக எடுத்துரைத்துள்ளார் (Bharathidasan, 2008).

## ஆபாசம்

ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடுகள் இல்லையென்று தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் கூறுகிறது. இருப்பினும், ஆண்களின் பார்வையில் பெண்; என்பவள் ஆபாசத்திற்குரியவளாகவே பார்க்கப்பட்டு வந்திருக்கிறாள் என்பதை அறியமுடிகின்றது.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு

உருவு நிறுத்த காமவாயில்

நிறையே அருளே உணர்வொடு திருஎன

முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

என்று ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயுள்ள ஒப்புமைகளைக் கூறுகிறது (Puliyurkesigen, 2012). இருப்பினும், பத்திரிக்கைகளும், ஊடகங்களும் மக்களுக்குப் பயன்படும் செய்திகளை வெளியிடுவதைக் காட்டிலும் விற்பனைக்காகவும், விளப்பரத்திற்காகவும் பெண்களின் கவர்ச்சிக்கரமான படங்களை வெளியிடுகிறது என்று தன் ஆதங்கத்தை ஞானக்கூத்தன் வெளிப்படுத்தியுள்ளார்.

"சென்ற இதழில் கொய்ராலா

படத்தைப் போட்டு அசத்திவிட்டீர்

இசைக்கேடான இடத்தில் மசியால்

தடவப்பட்ட ஒருத்தியின் படமும்"

இதன்வழி பார்க்கும்போது, இளைய தலைமுறையினருக்கு பால் உணர்வுகளைத் தூண்டும் காட்சியையும், படங்களையும் வெளியிடுவதால், இவைகள் பெண்களின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாகவும், கேடு விளைவிப்பதாகவும், அமையும் என்பதை ஞானக்கூத்தன் கவிதை வரிகள் சுட்டுகின்றது (Divakar Ranganathan, 2018).

## வரதட்சணைக் கொடுமை

பெண் வளர்ந்து ஆளாகிவிட்டால் அவளுக்குத் திருமணம் செய்து கொடுப்பது என்பது இன்றையச் சமுதாயத்தில் குதிரைக் கொம்பாகிவிட்டது. வரதட்சணை எனும் விலங்கு, அவள் கழுத்தை நெருக்கிக் கொண்டிருப்பதால் முதிர்கன்னிகளாய்த் திருமணத்திற்காகக் காத்திருக்கும் கன்னிப் பெண்களின் எண்ணிக்கையானது இன்றளவிலும்; கூடிக் கொண்டே போகிறது. மேலும், இக்கொடுமையினால் பல பெண்கள் தற்கொலைச் செய்து கொல்லுதல், கொலை செய்யப்படுதல், பிறந்த வீட்டிற்குத் துரத்தப்படுதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகிறன. பெண்ணைப் பெற்றவர்கள் பணக்காரர்களாக இருந்தால், வரதட்சணைக் கொடுத்து தம் பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து வைக்கின்றனர். ஏழையாக இருந்தால் திருமணம் செய்து வைக்க முடியாமல் கலங்குகின்றனர். பெண் பார்க்க வருபவர்களும், பெண்வீட்டின் பொருளாதார நிலையறிந்து, பெண்ணைப் பார்க்காமலே சென்று விடுகின்றனர். இதனால் காலங்காலமாக பெண்கள் வீட்டிலே வேதனையில் காலம் கழிக்கின்றனர். சில பெரியவர்கள் சாமி குற்றம்தான், கோயிலுக்குச் சென்று வந்தால் திருமணமாகும் என்று சொல்வதால்; பெண்களும், பெண் குடும்பத்தினரும், கோயிலுக்கு சென்று வருகின்றனர். இதனை ஞானக்கூத்தன் கவிதை வழி அறியலாம்.

"திருமணஞ்சேரியில் எழுந்தருளியுள்ள

மாபெருங் கடவுளைத் தரிசித்து வந்தால்

திருமணமாகும் என்று பெரியவர் சொல்லத்

திருமணஞ்சேரிக்குப் போய்வந்த" (Divakar Ranganathan, 2018)

## கேலி செய்தல்

அன்றும் இன்றும் ஆண்களின் கேலிக்கும், கிண்டலுக்கும் உரியவர்களாகவே பெண்கள் பார்க்கப்படுகின்றனர். கல்லூரி, பல்கலைக்கழகங்கள், கடை, பேருந்து நிறுத்தம், பேருந்தில் பயணம் செய்யும்போது எனப் பல இடங்களில் பெண்கள் கேலி செய்யப்படுகின்றனர். மனிதன் அறிவுவளர்ச்சி பெற்றுப் பல நூற்றாண்டுகள் ஆகியும் இவ்வாறான கீழத்தரமான செயல்களில் ஈடுபடுவதால், மனிதன் அறிவுவளர்ச்சி பெறவில்லை என்பதை உணர முடிகிறது.

"இத்தகைய கேலி செய்யும் நிகழ்ச்சி ஞானக்கூத்தன் கவிதைகளில் காணப்படுகிறது.

ஆளுக்கொன்று பற்ற வைத்துத்

தங்கள் பாக்கியை ஒன்றாய்த் திரட்டி

அங்கம்மளை ஆங்கிலப் படத்துக்குக்

கூட்டிக்கொண்டு போகலாமென்று

ரத்தினம் சொல்ல அனைவரும் சிரித்தனர்”

என்பதன் மூலம் அங்கம்மாள் கடையைத் திறந்து இறைவனை வழிபடும்போது நிறையபேர் அங்கே ஒன்றாய்ச் சேர்ந்து வந்து சுருட்டு வாங்கிப் பற்ற வைத்துக்கொண்டு, ரத்தினம் என்பவன் அங்கம்மாளை ஆங்கிலப் படத்துக்கு அழைத்துக் கொண்டு போகலாமென்று கேலி செய்கிறான். அதைக் கேட்ட அனைவரும் சிரித்தனர் (Divakar Ranganathan, 2018).

## பாலியல் வன்முறை

பாலியல் வன்முறையானது பாலியல் வன்புணர்வு, பாலியல் நோக்குடன் அடிமைப்படுத்துதல், கட்டாயப் பாலியல் தொழில், வலிந்து கர்ப்பமாக்குதல், கட்டாய இன விருத்தியை மேற்கொள்ளல், பாலியல் சார்ந்த கேலி, மிரட்டல், கட்டாயக் கருகலைப்பு எனப் பல குற்றங்களும் அடங்கும். ஒரு பெண் அல்லது ஆண் குடும்பம் விரும்பாத ஒருவருடன் காதல் அல்லது இன்பம் கொண்டார் என்பதற்காக வண்முறைக்கு உட்படுத்துவதையும் ஒருவகை பாலியல் வன்முறையே ஆகும். இதற்கு பல மாதர் சங்கம், பெண் விடுதலைக்கான சங்கம் எனப் பல இயக்கங்கள் பெண்களுக்காகப் போராடி வருகின்றன. பெண்களின் பாதுகாப்புக்கென அரசின் சட்டங்கள் பல இருக்கின்றன. ஆனால், இன்றுவரை பாலியல் பலாத்காரம் தொடர்ந்து கொண்டுதான் வருகிறது. இதற்கெல்லாம் காரணம் சட்டங்களும், இயக்கங்களும், பெண்களின் வன்முறைகளைத் தடுப்பதில் தீவிரம் காட்டுவதில்லை என்பதையே உணர்த்துகிறது.

“மறுநாள் கேள்விப்பட்டேன் உள்ளூர்க்

குதிரை வண்டிக்காரன் மண்டபத்தில்

அவளிடம் அயோக்யனானான் என்று!

மனதைக் கொஞ்சம் அரித்தது"

என்ற ஞானக்கூத்தன் கவிதையில் பெண்களுக்கு நடைபெறும் பாலியல் கொடுமை கூறப்பட்டுள்ளது (Divakar Ranganathan, 2018).

## முடிவுரை

ஒரு நாட்டில் பெண்கள் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களோ அவ்வளவு தூரமே அந்நாடு முன்னேறும். பெண்ணுரிமை இல்லாத நாடு காற்றில்லாத வீடாகும். பெண் மதிக்கப்படுகின்ற பொழுது சமூகம் மிளிரும். ஏனென்றால் ஒரு சமூகத்தின் இயக்கத்திற்குப் பெண்ணின் பங்களிப்பு மிகவும் அவசியமாகிறது. இன்று உலகளவில் பெண்கள் முன்னேறிக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், நாள்தோறும் பெண்களுக்கான வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இதற்கான காரணத்தை அறிந்து பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இன்று எங்கோ பெண்களுக்கு "கேலி, ஆபாசம், கற்பழிப்பு, கொலை" நடக்கின்றன நமக்கென்ன என்றில்லாமல்" நாளை நம் பெண்களுக்கும் நடக்கும்" என்பதை அனைவரும் சிந்தித்து செயல்பட வேண்டும். பெண்ணைப் புறம் தள்ளி எந்த வளர்ச்சியும் கிடையாது. பெண் இயற்கையானவள். இயற்கை எப்படிச் சமூகத்திற்குப் பயன்படுகிறதோ அதைப் போலப் பெண்ணும் சமூகத்திற்குப் பயன்படுகிறாள். அதனால்தான் பெண்ணும் இயற்கையும் ஒன்று எனக் கூறுகின்றார்கள்.

## References

Annithamasu, (2006) Thamilaga Magaliriyal, Interantional Institute of Tamil Studies, Chennai, India.

Bharathidasan, (1991) Kudumba villaku, Manivasagar Pathippagam, Chennai, India.

Bharathidasan, (2008) Bharathidasan Kavithaikal, Aruna Pathippagam, Chennai, India.

Desikavinayaga Pillai, (1961) Malarum Malaiyum, Paari Nilaiyam, Chennai, India.

Divakar Ranganathan, (2018) Gnanakoothan Kavithaigal, Kalachuvadu Pathippagam, Chennai, India.

Palanidasan, (2017) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Puliyurkesigen, (2012) Tholkappiyam porulathiagaram, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License